# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 51/மா/2022**
**நாள் : 30.05.2022**

திரு. N. சரவணன்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–11,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை. – எதிர்மனுதாரர்

சென்னை, இராமாபுரம், குறிஞ்சி நகர், 2வது மெயின் ரோடு, C-30 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N. சரவணன் என்பவரின் 9.5.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.5.2022-ல் பெறப்பட்டு, 51/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, இராமாபுரம், குறிஞ்சி நகர், 2வது மெயின் ரோடு, C-30 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N. சரவணன் என்பவரின் 9.5.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"ஆகஸ்ட் 2018–ல் உதவி பொறியாளர், இராமாபுரம், சென்னை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர், வளசரவாக்கம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகிய இடங்களில் புகார் அளித்திருந்த நிலையில் எனது புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி அவ்விடத்தின் நில அளவை செய்து தர வேண்டும் என்று மதுரவாயில் வட்டாட்சியருக்கு 04.09.2018 அன்று வளசரவாக்கம் அலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு பிறகு மாவட்ட ஆட்சியரை நாங்கள் நேரில் சந்தித்து மனு கொடுத்ததின் பேரில் மதுரவாயில் தாசில்தார் மற்றும் நில அளவையர் நேரில் வந்து 31.01.2019 அன்று ஆக்கிரமிப்பு இடத்தை FMBயில் உள்ள அளவுகள்படி அளந்துவிட்டு சென்றனர்.

பின்னர் 06.02.2019 அன்று மதுரவாயில் வட்டாட்சியரிடமிருந்து பதில் கடிதம் பெறப்பட்டது. இதில் அந்த வீடு முழுவதும் அரசு புறம்போக்கு வகைப்பாட்டை சேர்ந்த நீர் நிலை புறம்போக்கு இடம் என்று உறுதிப்படுத்தினர். இந்த நகலை சென்னை வளசரவாக்கம்,

மாநகராட்சி அலுவலகம், **சென்னை** மாவட்ட ஆட்சியர் மற்றும் புகார்தாரரான எனக்கும் கொடுக்கப்பட்டது.

அதற்கு பிறகு 01.08.2019 அன்று இராமாபுரம் உதவி பொறியாளர், சென்னை மாநகராட்சி முன்னிலையில் என் வீட்டின் முன் பகுதியில் ஆக்கிரமித்து கட்டியுள்ள வீட்டின் ஒரு பகுதியான கழிவறையை மட்டும் அகற்றி பின்னர் அந்த வீட்டிற்கு Lock & Seal வைத்து விட்டு அந்த வீடு ஒரு சில நாட்களில் அகற்றப்படும் என்று உறுதி கூறிவிட்டு மாநகராட்சி அலுவலர்கள் சென்றனர்.

கடந்த 2 வருடங்களாக சென்னை வளசரவாக்கம் மாநகராட்சிக்கு பலமுறை நேரில் சென்று புகார் அளித்து வந்தோம் மற்றும் கொரோனாவை காரணம் காட்டியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போட்டு விட்டனர்.

இதனால், கடந்த ஆண்டு 21.09.2021, மீண்டும் தொடர் தபால் மற்றும் CM Cell புகார் மூலமாக சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை வளசரவாக்கம் அலுவலகத்திற்கு புகார் தெரிவித்து வந்த நிலையில் என்னுடைய மனுவின் உண்மை தன்மையை புரிந்து கொண்டு என்னுடைய புகாரை தட்டிக் கழிக்க வேண்டும் என்ற உள்நோக்கில் மாநகராட்சி அலுவலர்கள் நடந்து கொண்டனர். மேலும் நாங்கள் வளசரவாக்கம் உதவி செயற்பொறியாளரிடம் நேரில் சென்று புகார் அளித்ததின் பேரில் இராமாபுரம் உதவி பொறியாளர் நேரில் ஆய்வு செய்து பின்பு திரும்பவும் மதுரவாயில் தாசில்தார் அவர்களை நில அளவை செய்து தரும்படி மனு ஒன்றை அனுப்பினர். பின்பு அதன் தொடர்ச்சியாக நான் எழுதிய ஆன்லைன் புகாருக்கு மதுரவாயில் தாசில்தாரிடமிருந்து பதில் கடிதம் வந்த பின்பு அந்த இடத்தை அகற்றப்படும் என்று உறுதிப்படுத்தி எல்லா மனுவுக்கும் ஒரே பதில் வளசரவாக்கம் அலுவலகத்தால் கொடுக்கப்பட்டது.

நில அளவையர் மற்றும் இராமாபுரம் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் 06.05.2022 அன்று ஆக்கிரமிப்பு இடத்தை FMBயில் உள்ள அளவுகள்படி அளந்துவிட்டு சென்றனர்.

பின்பு நாங்களும் மதுரவாயில் தாசில்தாருக்கு CM Cell மூலமாக தொடர் புகார் அளித்தும் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து தெரிவித்ததின் பேரில் அவர்கள் எங்களுக்கு பதில் தெரிவித்தனர். அந்த பதில் மனுவில்,

1) நான் குறிப்பிட்டுள்ள இடம் புல எண்.175-1யு22-க்கு மேற்கு பகுதியில் புல எண்.172-1 இராமாபுரம் நீர்நிலை எனும் புறம்போக்கு வகைப்பாட்டை சார்ந்தது என்றும்
2) மேலும் மேற்கண்ட புலத்தில் அமைந்துள்ள வீடு இரண்டு வருடமாக உபயோகப்படுத்தாமல் வீடு பூட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலே உள்ளதை குறிப்பிட்டு சென்னை மாநகராட்சிக்கு புதிய புகாரை CM Cell மூலமாக அளித்திருந்தேன். இந்த புகாருக்கு துளியும் சம்மந்தமில்லாமல் புதிய பதில் ஒன்றை மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்தனர்.

அந்த பதில் மனுவானது இராமாபுரம் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிவித்து என்னுடைய மனுவை முடித்து வைத்துவிட்டனர். மதுரவாயில் தாசில்தாரிடமிருந்து பதில் கடிதம் வந்த பின்பு ஆக்கிரமித்து கட்டியுள்ள வீடு அகற்றப்படும் என்று கூறிவந்த நிலையில், என்னுடைய புகாருக்கும், இராமாபுரம் ஏரி ஆக்கிரமிப்புக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை.

ஏனென்றால் இராமாபுரம் ஏரி ஆக்கிரமிப்பு வழக்கு சம்மந்தமாக நில அளவையர் சுமார் 350க்கு மேற்பட்ட வீடுகளை அளந்து, உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி எல்லா வீட்டிற்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பாளர் வீட்டை ஏற்கெனவே காலி செய்து Lock & Seal மாநகராட்சியால் வைத்த நிலையில் மற்றும் நீதிமன்றம் மூலமாக எந்த ஒரு சம்மனும் ஆக்கிரமிப்பாளருக்கு இதுவரை வளசரவாக்கம் அலுவலகத்திலிருந்து எந்த ஒரு நோட்டீசும் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை

வளசரவாக்கம் அலுவலக உயர் அதிகாரியிடம் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த 2 வருடங்களுக்கு முன் ஆக்கிரமித்து கட்டியுள்ள வீட்டில் ஒரு சிறிய பகுதியை அகற்றிவிட்டு பின்பு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்பு கடந்த 8 மாதங்களுக்கு பின்பு தொடர் புகாருக்கு பிறகு மதுரவாயில் தாசில்தார் நீர்நிலை புறம்போக்கு என்று உறுதிப்படுத்திய பின்பு அகற்றப்படும் என்று எல்லா மனுக்களுக்கும் பதில் தெரிவித்தனர். இப்பொழுது சம்மந்தம் இல்லாத இராமாபுரம் ஏரி ஆக்கிரமிப்பை என் மனுவுடன் தொடர்புப்படுத்தி மீண்டும் ஆக்கிரமிப்பாளர் வீட்டை அகற்றாமல் தவிர்த்து வருகின்றனர்.

ஆக்கிரமிப்பாளர் மீண்டும் அந்த வீட்டை கைப்பற்றி உபயோகப்படுத்த Lock & Seal-யை எடுத்துவிட்டார். இதை மாநகராட்சி அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்தவொரு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒருதலை பட்சமாக செயல்படுகின்றனர்.

ஆகவே இது சம்மந்தமாக பரிசீலித்து என் வீட்டின் முன் பகுதியில் ஆக்கிரமித்து கட்டியுள்ள வீட்டை அகற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு 17.05.2022 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டார். மண்டல அலுவலர், மண்டலம்–11 அவர்கள் தனது 23.5.2022 நாளிட்ட அறிக்கையில் :

"புகாரில் கோரியுள்ள இராமாபுரம் குறிஞ்சி நகர், 2வது பிரதான சாலையின் கடைசியில் அமைந்துள்ள இடம் நீர்நிலை ஆக்கிரமிப்பா ? என அறியும்பொருட்டு 11.02.2022 அன்று நில அளவையர் மூலம் நில அளவீடு செய்து தருமாறு சென்னை மாநகராட்சி மூலம் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து 10.06.2022 அன்று நில அளவை செய்யப்பட்டது என தெரியவருகிறது. இது தொடர்பாக வட்டாட்சியர் அவர்களிடம் இருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை. அறிக்கை பெறப்பட்டவுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 24.05.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 17.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) முறையீட்டு மனுதாரர் 24.05.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான், எனது வீட்டிற்கு முன் பகுதியில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டைச் சேர்ந்த நீர்நிலை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து எனது வீட்டின் ஒரு பகுதியை மறைத்து வீடு கட்டியுள்ளனர். இது தொடர்பாக மாநகராட்சியில் புகார் மனு அளித்த போது, கடந்த 2 வருடங்களுக்கு முன் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள ஒரு சிறிய பகுதியை மட்டும் அகற்றிவிட்டு அதன் பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எனது வீட்டிற்கு முன்புறம் நீர்நிலை புறம்போக்கு நில ஆக்கிரமிப்பை அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது 9.5.2022 நாளிட்ட படிவத்துடன் அனுப்பப்பட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ல் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகிய இருவரும் 24.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

“இராமாபுரம் குறிஞ்சி நகர் இரண்டாவது பிரதான சாலையில் மனுதாரர் வசிக்கும் வீட்டிற்கு முன்புறம் நீர்நிலை புறம்போக்கு இடத்தில் கட்டப்பட்ட, அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள வீட்டினை அகற்றிட மனு அளித்திருந்தார். மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட வீடு நீர்நிலை ஆக்கிரமிப்பா என்பது குறித்து தெளிவுபடுத்துமாறு 11.2.2022 அன்று வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அவரிடமிருந்து இன்னும் இது தொடர்பான அறிக்கை பெறப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள நீர்நிலை புறம்போக்கில் அமைந்துள்ள வீடு மாநகராட்சியின் கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதால், அதற்கான Lock and Seal Notice மற்றும் மாநகராட்சி ஆணையரிடமிருந்து ஆணை பெற்று மேற்கண்ட கட்டடம் Demolition செய்யப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்” என்று தெரிவித்துள்ளனர்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11ல் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையின் போது, கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், தனது வீட்டிற்கு முன்பகுதியில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டைச் சேர்ந்த நீர்நிலை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து தனது வீட்டின் ஒரு பகுதியை மறைத்து வீடு கட்டியுள்ளனர். இது தொடர்பாக, மாநகராட்சியில் புகார் மனு அளித்த போது, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள ஒரு சிறிய பகுதியை மட்டும் அகற்றிவிட்டு, பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, தனது வீட்டிற்கு முன்புறம் நீர்நிலை புறம்போக்கு நில ஆக்கிரமிப்பை அகற்றித் தருமாறு இம்முறைமன்றத்தைக் கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11ல் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரது வாக்குமூலத்திலிருந்து, மனுதாரரின் வீட்டின் முன்புறம் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடு, நீர்நிலை ஆக்கிரமிப்பா என்பது குறித்து நில அளவையர் மூலம் நில அளவீடு செய்து தருமாறு, 11.2.2022 அன்று வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பியதாகவும், வட்டாட்சியரிடமிருந்து இது தொடர்பான அறிக்கை எதுவும் பெறப்படவில்லை என்றும் தெரிவித்தனர். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள நீர்நிலை புறம்போக்கில் அமைந்துள்ள வீடு மாநகராட்சியின் கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதால், அதற்கான Lock and Seal Notice மற்றும் மாநகராட்சி ஆணையரிடமிருந்து ஆணை பெற்று மேற்கண்ட கட்டடம் Demolition செய்யப்படும் என்றும் தெரிவித்தனர். மண்டல அலுவலரும் தமது அறிக்கையில் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் தெரிவித்த கருத்தினையே தெரிவித்து வட்டாட்சியரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டவுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரர் தமது குறைபாட்டை 2018-ஆம் ஆண்டிலிருந்து தெரிவித்து பல புகார் மனுக்களை அனுப்பியுள்ளார். ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11ஐ சேர்ந்த அலுவலர்கள் இதனை கண்டும் காணாமலும் இருந்துள்ளனர். உதவி செயற்பொறியாளரும் இளநிலை பொறியாளரும் தமது வாக்குமூலத்தில் நீர்நிலைபுறம்போக்கு அமைந்துள்ள வீடு மாநகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதால் Lock and Seal Notice வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (ஆனால் எந்த தேதியில் என்று தெரிவிக்கவில்லை).

அதன் பின்னர் எந்தவித தொடர் நடவடிக்கையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. இருப்பினும் Lock and Seal Notice வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அனுமதியற்ற கட்டிடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், மண்டலம் - 11 அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இதில் மாநகராட்சிகளின் விதிமுறைகளைப் பின்பற்றி, அங்கீகாரமற்ற முறையில் கட்டிய கட்டடத்தை முறைப்படி அறிவிப்புகள் அளித்து Lock and seal மற்றும் demolition அறிவிப்பும் அளித்து நடவடிக்கை எடுக்க ஆணையிடப்படுகிறது. இதில் காலந்தாழ்த்தியும் ஒருதலைபட்சமாகவும் நடந்துகொண்டு, நடவடிக்கை எடுக்காமலிருந்த பொறியாளர்கள் மீதும், உதவி ஆணையர் மற்றும் மண்டல அலுவலர்கள் (Zonal Officers) மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் நீர்நிலை புறம்போக்கில் வட்டாட்சியர் அலுவலக நில அளவை குறித்து கூறுவது பிரச்சினையை வேண்டுமென்றே திசை திருப்பும் செயல். The field officials have been indifferent and collusive in the issue inspite of receipt of complaint from the petitioner. This complicity, collusion and inaction are condemned in severe terms.

2022-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. சரவணன்,
   S/o. S. நடராஜன்,
   C-30, IInd மெயின் ரோடு,
   குறிஞ்சி நகர், ராமாபுரம்,
   சென்னை – 600 089.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 11,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   வளசரவாக்கம், சென்னை – 600 087.

3. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.